# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 19/மா/2026
நாள் 10.08.2026

N. சேகர்
சென்னை–600 081 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம் 4
பெருநகர சென்னை மாநகராட்சி
(2) D. உதயகுமார், ஆலோசகர்,
உதயா மெட்டல்ஸ்,
சென்னை–600 081. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 081, தண்டையார்பேட்டை, சிவாஜி நகர், 8வது தெரு, கதவு எண் 152 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.சேகர் என்பவரின் 25.11.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.11.2025 அன்று பெறப்பட்டு 19/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 081, தண்டையார்பேட்டை, சிவாஜி நகர், 8வது தெரு, கதவு எண் 152 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.சேகர் என்பவர் 25.11.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"வடசென்னை ஆர்.கே. நகர் தொகுதி, 41–வது வார்டு மண்டலம்–4 உட்பட்ட சிவாஜி நகர் மெயின் தெரு, கதவு எண் 1/1 என்ற முகவரியில் அரசுக்கு எதிராகவும், அரசு துறைக்கு எதிராகவும், அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து பொது மக்களுக்கு இடையூறாக செயல்பட்டு வருவது தொடர்பாக சென்னை மாநகராட்சி அலுவலகங்களில் தொடர்ந்து பலமுறை புகார் அளிக்கும் புகார் மீது எவ்வித நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தங்கள் துறையை நாடி வந்துள்ளோம். சட்டப்படி அரசு அதிகாரிகள் மீதும் ஆக்கிரமிப்புக்கு துணையாக போகும் அரசு அதிகாரிகள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டும் சம்பந்தப்பட்ட நிலத்தை அரசு உடைமை ஆக்குவதற்கும் அல்லது நிரந்தர உத்தரவு பிறப்பித்து அரசுக்கு எதிராக செயல்பட்டு வரும் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனுவாகும்.

சாட்சிய சட்டத்தின்படி ஒவ்வொரு துறைக்கும் சட்டப்படி அரசாணைப்படி தமிழ்நாடு அரசாணைப்படி முப்பது நாளில் தங்கள் புகார் மீது நடவடிக்கை எடுக்காத அரசு அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க கோரி புகாராகும்.

சம்பந்தப்பட்ட துறை முப்பது நாளில் புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஒவ்வொரு துறை அதிகாரிகளும் தன் கடமையை தவிர மறுத்த அதிகாரி மீது சட்டப்படி

நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்று தங்கள் துறைக்குறி உள்ளதால் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிக்கும் இது நடவடிக்கை எடுக்க கோரி புகார் ஆகும்.

குறித்து :

நேரடியாக சென்ற புகார் அளித்த அனைத்து நபர்களும் இந்த புகார் மனுவில் இணைக்கப்பட்டுள்ளது.

தங்கள் துறையின் உரிய அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க சென்னை உயர் தங்கள் துறையின் உரிய அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க சென்னை உயர்நீதிமன்ற முத்திரைத்தாளான ரூபாய் 10/– இணைக்கப்பட்டுள்ளது.''

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் முதுநிலை வருவாய் அலுவலர் தனது 24.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன் சென்னை 600 081 தண்டையார் பேட்டை சிவாஜி நகர் 6–வது தெரு கதவு எண் 100ல் வசித்து வரும் திரு N. சேகர் என்பவர் வட சென்னை ஆர்.கே.நகர் தொகுதி வார்டு 41க்குட்பட்ட சிவாஜி நகர் மெயின் தெரு, கதவு எண் 1/1ல் உள்ள நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து பொதுமக்களுக்கு இடையூறாக செயல்பட்டு வருவதாகவும் சம்மந்தப்பட்ட நிலத்தை அரசுடமை ஆக்குவதற்கும் அங்கு உள்ள நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரியது குறித்து புகார் அளித்துள்ளார். புகாரின் மீது எதிர்மனுதாரர் வாதத்தை எழுத்துப்பூர்வ அறிக்கையை தொடர்புடைய ஆவணங்களின் நகல்களையும் சேர்த்து 15 தினங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் தொடர்புடைய ஆவணங்களை நேரடி விசாரணையின்போது சமர்ப்பிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

புகார் மனுதாரர் குறிப்பிடும் வடசென்னை ஆர்.கே.நகர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4ல் வார்டு 41க்குட்பட்ட சென்னை 600 081 தண்டையார்பேட்டை சிவாஜி நகர் மெயின் தெரு, கதவு எண் 1ல் காணும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான நிலம், தொழில் வணிக நோக்கத்திற்காக மகாவீர் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அதற்கான டிசம்பர் 2025 மாதம் வரை வாடகை செலுத்தி வருகிறார்கள். புகார் மனுதாரர் குறிப்பிடும் இடத்தில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக எவர்சில்வர் பாத்திரம் தயாரிக்கும் தொழிலினை திரு L.டில்லி என்பவர் M/s. உதயா மெட்டல்ஸ் என்கின்ற பெயரில் கடந்த 2024–25 நிதியாண்டு வரை பெருநகர சென்னை மாநகராட்சியில் தொழில் உரிமம் மற்றும் தொழில் வரியும் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த நிறுவனத்திற்கு திரு L.டில்லி என்பவர் இறந்த பின்னர் அவரது மனைவி துர்கா என்பவர் உரிமையாளராக குறிப்பிட்டு பதிவு எண் 33GZHPD 4135 FIZP வாயிலாக GST சான்றும் பெறப்பட்டுள்ளது.

புகார் மனுதாரர் குறிப்பிடும் இடத்தில் அமைந்துள்ள M/s.உதயா மெட்டல்ஸ் மீதான புகார் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு கடந்த 4.2.2025 அன்று தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புச் சட்டம் 1998 பிரிவு 102,105,107,108,108-A மற்றும் 109ன்படி கீழ் தாக்கீது வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் திரு D.உதயகுமார் என்பவர் புகார்தாரர் கடந்த பல ஆண்டுகளாக பணப்பயன் பெறும் உள்நோக்கத்துடன் புகார் அளித்து வருவதாகவும், இது தொடர்பாக கடந்த 30.6.2025 அன்றே நடவடிக்கை எடுக்கக் கோரி காவல் நிலையத்திலும் பின்னர் காவல்துறை உயர் அலுவலகத்திற்கும் புகார் அளித்துள்ளதாகவும் 9.6.2025 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, புகார் மனுதாரர் குறிப்பிடும் நிலம், ஆக்கிரமிப்பு நிலம் இல்லை எனவும், அந்த நிலம் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தொழில் வணிக பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் விவரம் :

(1) திரு. A. திலிப்குமார் த/பெ சுப்பிரமணி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அனுப்பிய புகார் மனுவின் நகல்.
(2) 2024–2025ம் ஆண்டு தொழில் உரிமம் நகல்.
(3) ஜி.எஸ்.டி. சான்று பதிவு எண் 33GZHPD 4135 FIZP நகல்.
(4) தொழில் வரி ரசீது எண் 04–041–IN- 02712 நகல்.
(5) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ரசீது எண் 127054 மற்றும் 127239 நாள் 19.01.2026 நகல்கள்.
(6) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 102, 105, 107, 108, 108–A, 109–ன் கீழாக 04.02.2025 நாளிட்ட தாக்கீது நகல்.
(7) திருமதி துர்கா க/பெ டில்லி அவர்களின் 09.02.2025 நாளிட்ட மனுவின் நகல்.
(8) திரு. D. உதயகுமார், உதயா மெட்டல்ஸ் த/பெ டில்லி அவர்களின் 09.02.2025 நாளிட்ட புகார் மனுவின் நகல்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 16.04.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. 2026 தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தேர்தல் நடைபெறுவதால், மேற்கண்ட விசாரணை ஒத்தி வைக்கப்பட்டு, மேற்கண்ட மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் மற்றும் அவருக்கு உதவியாக திரு. R.T. மணிஜோ ஆகியோர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

> “வடசென்னை, ஆர். கே.நகர் தொகுதி, 41 வது வார்டு மண்டலம் 4 உட்பட்ட சிவாஜி நகர் மெயின் தெரு கதவு எண் 1/1 அமைந்துள்ள இடம் அரசுக்கு சொந்தமானதாகும். இந்த அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து எவ்வித உரிமம் இல்லாமலும் அனுமதியில்லாமலும் அலுமனிய பட்டறை நடத்தி வருகிறார்கள். பட்டறை நடத்திவரும் தெருவானது மிகவும் குறுகலான தெருவாகும். இந்த பட்டறையில் அலுமினிய ராடுகளை வெட்டும் போது ஏற்படும் சிறு துண்டுகள் ரோடு முழுவதும் பரவி பொதுமக்கள் குறிப்பாக வயோதிகர்கள் பள்ளி மாணவிகள், நடப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த பட்டறையை இந்த இடத்தை விட்டு அகற்றுமாறு பலமுறை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மனு அளித்தும் இதுரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
>
> எனவே, மேற்கண்ட அனுமதியில்லாமலும், பொது மக்களுக்கு இடையூறாகவும், இயங்கும் மேற்கண்ட பட்டறையை உடனடியாக அகற்றுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.”

7. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உரிம ஆய்வாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், அவ்விடம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான நிலம், தொழில் வணிக நோக்கத்திற்காக மகாவீர் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அதற்கான டிசம்பர் 2025 மாதம் வரை வாடகை செலுத்தி வருகிறார். அவ்விடத்தில் எவர்சில்வர் பாத்திரம் தயாரிக்கும் தொழிலினை திரு L. டில்லி என்பவர் M/s உதயா மெட்டல்ஸ் என்கின்ற பெயரில் கடந்த 2024-25 நிதியாண்டு வரை பெருநகர சென்னை மாநகராட்சியில் தொழில் உரிமம் மற்றும் தொழில் வரியும் செலுத்தி வருகிறார். திரு L. டில்லி என்பவர் இறந்த பின்னர் அவரது மனைவி துர்கா என்வர் உரிமையாளராக குறிப்பிட்டு பதிவு எண் 33GZHPD4135FIZP வாயிலாக GST சான்றும் பெறப்பட்டுள்ளது’’.

மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலகத்தால் 04.02.2025 அன்று தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புச் சட்டம் 1998 பிரிவு 102, 105, 107, 108, 108A, மற்றும் 109ன்படி தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிட்ட இடத்தை கள ஆய்வு செய்து அவ்விடத்தின் வகைப்பாட்டு தன்மை அறிந்து இம்முறைமன்றத்தில் தெரிவிக்க இரண்டு வார கால அவகாசம் அளிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் பொறியாளர் துறையின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.’’

8. இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் உதயா மெட்டல்ஸ், ஆலோசகர் திரு. D. உதயகுமார் என்பவர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“சென்னை – 81, தண்டையார்பேட்டை, சிவாஜி நகர், கதவு எண்.1 என்ற முகவரியில் உதயா மெட்டல்ஸ் என்ற நிறுவனத்தை எனது தந்தை திரு.டில்லி அவர்கள் 20 வருடங்களுக்கு மேலாக நடத்தி வந்தார்கள். அவர்கள் காலமான பிறகு எனது தாயார் திருமதி.துர்கா அவர்கள் பெயரில் மேற்கண்ட நிறுவனத்தை நடத்தி வருகின்றேன். மேற்கண்ட இடமானது தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடமாகும். எங்கள் நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் முறையான உரிமம் பெற்றுள்ளோம்’’.

மனுதாரர் திரு N.சேகர் அவர்கள் எங்களிடம் மாமூல் கேட்டு இந்நாள் வரை மிரட்டி வருகிறார். மாமூல் கொடுக்காத காரணத்தினால் அரசு துறைகளுக்கு எங்கள் மீது பொய்யான மனுக்களை அளித்து எங்களை தொழில் செய்யவிடாமலும், மன ஊளைச்சலுக்கும் ஆளாக்கி வருகிறார். இது குறித்து அவர் மீது கடந்த 2025 ஆண்டு முதல் காவல் துறையிடம் புகார் மனு அளித்துள்ளோம். மேலும் நேதாஜி நகர் பகுதி – ,தமிழ்நாடு எவர்சில்வர் பாத்திர உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பாக மனுதாரர் திரு.சேகர் மீது பணம் கேட்டு மிரட்டுவதாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலருக்கு மனு அளித்துள்ளார்கள். மேலும் எங்கள் பகுதியில் உள்ள பொதுமக்கள் எங்கள் நிறுவனத்தினால் எந்த வித பாதிப்பும் இல்லை என்றும், ஆட்சேபணை இல்லை என்றும் தெரிவித்து கையொப்பம் இட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலகத்திற்கு அளித்துள்ளார்கள்.

எனவே தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் முறையாக இட ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் முறையாக உரிமம் பெற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட வாரியத்திற்கு முறையாக நிலுவை இல்லாமல் இந்நாள் வரை மாத வாடகை செலுத்தியும், எங்கள் நிறுவனத்தை நடத்தி வருகிறோம். எனவே, மனுதாரர் பண பயன் எதிர்பார்த்தும், மிரட்டியும் வருவதால் மனுதாரர் உண்மைக்கு புறம்பாக அளித்த மனுவினை தள்ளுபடி செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலே குறிப்பிட்டுள்ள மாத வாடகை ரசீது நகல், உரிமம் நகல், ஒதுக்கீடு செய்யப்பட்ட செயல்முறை ஆகியவற்றின் நகல்களை இத்துடன் இம்முறை மன்ற நடுவத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.’’

9. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உரிம ஆய்வாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 15.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் அளித்த வாக்குமூலத்தில், மனுதாரர் ஆக்கிரமிப்பு என்று குறிப்பிட்ட இடத்தை கள ஆய்வு செய்து அவ்விடத்தின் வகைப்பாடு தன்மை அறிந்து இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவிக்க இரண்டு வார கால அவகாசம் அளிக்குமாறு கோரியதின் அடிப்படையில், முதல் எதிர்மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.06.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு, மனுதாரர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரருக்கு நகலிடப்பட்டது. ஆனால், 19.06.2026 அன்றைய விசாரணைக்கு முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜராகததால், முதலாம் எதிர்மனுதாரர் 17.07.2026 அன்று நடைபெறும் இறுதி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.06.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

10. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளர் ஆகியோர் 17.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“15.05.2026 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் எங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு வடசென்னை, 41வது வார்டு, மண்டலம் 4ற்கு உட்பட்ட சிவாஜி நகர் மெயின் தெரு, கதவு எண்.1/1 என்ற இடம் கள ஆய்வு செய்யப்பட்டது.

கள ஆய்வில் அவ்விடம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமானது என கண்டறியப்பட்டது. அவ்விடத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டிடம் கட்டப்பட்டு வணிக நோக்கத்திற்காக மகாவீர் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு, அதில் அமைந்துள்ள தகரகொட்டகையில் எவர்சில்வர் பாத்திரம் தயாரிக்கும் தொழில் திருமதி.துர்கா என்பவரால் நடத்தி வரப்படுகிறது. அங்கு அமைக்கப்பட்டுள்ள தகரகொட்டகைக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி தேவையில்லை.

அவ்விடத்தின் ஒதுக்கீட்டுதாரர் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு மாதந்தோறும் உரிய வாடகையினை செலுத்தி வருகிறார் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட செயல்முறை ஆணை நாள் 31.05.2007–ன் நகல் மற்றும் வாடகை ரசீதின் நகல் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.”

11. மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் அறிக்கை, முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் 15.05.2026 அன்றைய விசாரணைக்கு ஆஜரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உரிம ஆய்வாளர்கள், உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவிப் பொறியாளரின் 17.07.2026 நாளிட்ட வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் உதயா மெட்டல்ஸ், ஆலோசகரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

வடசென்னை, ஆர். கே.நகர் தொகுதி, 41 வது வார்டு, மண்டலம் 4 உட்பட்ட சிவாஜி நகர் மெயின் தெரு கதவு எண் 1/1–ல் அமைந்துள்ள இடம் அரசுக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து எவ்வித உரிமம் இல்லாமலும் அனுமதியில்லாமலும் அலுமனிய பட்டறை நடத்தி வருகிறார்கள் என்பதும் பட்டறை நடத்திவரும் தெருவானது மிகவும் குறுகலான தெருவில் உள்ள இந்த பட்டறையில் அலுமினிய ராடுகளை வெட்டும் போது ஏற்படும் சிறு துண்டுகள் ரோடு முழுவதும் பரவி பொதுமக்கள் குறிப்பாக வயோதிகர்கள் பள்ளி மாணவிகள், நடப்பதற்கு மிகவும் சிரமப்படுவதால், இந்த பட்டறையை மேற்கண்ட இடத்திலிருந்து அகற்றுமாறு பலமுறை பெருநகர

சென்னை மாநகராட்சிக்கு மனு அளித்தும் இதுரை நடவடிக்கை எடுக்காததால், மேற்கண்ட அனுமதியில்லாமலும், பொது மக்களுக்கு இடையூறாகவும் இயங்கும் மேற்கண்ட பட்டறையை உடனடியாக அகற்றுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார் தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், அவ்விடம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான இடத்தில், அவ்வாரியத்தால் 31.05.2007 நாளிட்ட செயல்முறையின்படி தொழில் வணிக நோக்கத்திற்காக மகாவீர் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அவ்விடத்தில் எவர்சில்வர் பாத்திரம் தயாரிக்கும் தொழிலினை திரு L. டில்லி என்பவர் M/s உதயா மெட்டல்ஸ் என்கின்ற பெயரில் கடந்த 2024-25 நிதியாண்டு வரை பெருநகர சென்னை மாநகராட்சியில் தொழில் உரிமம் பெற்று நடத்தி வந்த நிலையில், அவரின் மறைவிற்கு பின் அவரது மனைவி திருமதி துர்கா என்பவர் அவ்விடத்தில் தகர கொட்டகையில் பட்டறை நடத்தி வருவதும், அதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதி தேவையில்லை என்பதும், மேலும் அதற்கான GST சான்று 33GZHPD4135FIZP பெற்றிருப்பதும், பட்டறைக்கான வாடகை மாதந்தோறும் அன்னாரால் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், இருப்பினும் மேற்கண்ட நிறுவனத்தின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலகத்தால் 04.02.2025 அன்று தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 102, 105, 107, 108, 108A, மற்றும் 109ன்படி தாக்கீது வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் அறிக்கை, உரிம ஆய்வாளர்கள், உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான இடத்தினை, அவ்வாரியத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சென்னை–81, தண்டையார்பேட்டை, சிவாஜி நகர், கதவு எண்.1 என்ற முகவரியில் உதயா மெட்டல்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருவதாகவும், தங்கள் நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் முறையான உரிமம் பெறப்பட்டுள்ளது என்பதும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டு வாரியத்திற்கு முறையாக வாடகை செலுத்தி வருகிறார் என்பதும், மனுதாரர் திரு N.சேகர் என்பவர் அரசு துறைகளுக்கு தங்கள் மீது பொய்யான மனுக்களை அளித்து தங்களை தொழில் செய்யவிடாமலும், மாமூல் கேட்டு மிரட்டி வருவதாகவும், அதனால், மன உளைச்சலுக்கும் ஆளாக்கி வருகிறார் என்பதும், இது குறித்து அவர் மீது கடந்த 2025 ஆண்டு முதல் காவல் துறையிடம் புகார் மனு அளிக்கப்பட்டது என்பதும், நோதாஜி நகர் பகுதி தமிழ்நாடு எவர்சில்வர் பாத்திர உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பாக மனுதாரர் திரு.சேகர் மீது பணம் கேட்டு மிரட்டுவதாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலருக்கு மனு அளித்துள்ளார்கள் என்பதும், தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் நிறுவனத்தினால் எந்த வித பாதிப்பும் இல்லை என்றும் / ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்து கையொப்பம் இட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் அலுவலகத்திற்கு அளித்துள்ளார்கள் என்பதும், மனுதாரர் பண பயன் எதிர்பார்த்தும், மிரட்டியும் வருவதால் மனுதாரர் உண்மைக்கு புறம்பாக அளித்த மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கோரியிருப்பதும் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் உதயா மெட்டல்ஸ், ஆலோசகர் திரு. D. உதயகுமார் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தன்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ள சென்னை–81, தண்டையார்பேட்டை, சிவாஜி நகர், கதவு எண்.1 என்ற முகவரியில் உதயா மெட்டல்ஸ் என்ற நிறுவனமானது தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான இடத்தில், அவ்வாரியத்தினால் கட்டிடம் கட்டப்பட்டு வணிக நோக்கத்திற்காக மகாவீர் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அவ்விடத்தில் தகரகொட்டகையில் எவர்சில்வர் பாத்திரம் தயாரிக்கும் தொழிலை தற்போது திரு.L. டில்லி என்பவரின் மனைவி திருமதி.துர்கா என்பவரால் நடத்தப்படுகிறது என்றும், வாடகை செலுத்தப்படுகிறது என்றும், தகர கொட்டகையில் அமைக்கப்பட்ட மேற்கண்ட நிறுவனத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி தேவையில்லை என்று,

முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உரிம ஆய்வாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்து இருந்தாலும், பிரிவு 102 தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்படி உரிய அனுமதியின்றி எவ்வித தொழிலும் செய்வது சட்டப்படி முறையானதாகாது என்பதாலும், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 102, 105, 107, 108, 108A மற்றும் 109ன் கீழ் தாக்கீதுகள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் அலுவலகத்தால் வழங்கியுள்ள நிலையிலும், உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையரை அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. N. சேகர்,
கதவு எண் 152, 8வது தெரு,
தண்டையார்பேட்டை,
சென்னை–600 081.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை 600 021.

(4) திரு. D. உதயகுமார்,
ஆலோசகர், உதயா மெட்டல்ஸ்,
கதவு எண் 1, மெயின் தெரு, சிவாஜி நகர்,
தண்டையார்பேட்டை, சென்னை–600 081.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல் :

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

17/8/26

செயலாளர்.

17/8/26

1/10